O.S.No.345/2010

Date:18.07.2018

வாதி தரப்பு சாட்சி 1 - மொக்கைஇளங்கான், த-பெ.கோசாலி

சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

எனக்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஊருக்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஊருக்காக பொதுவில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். பொதுமக்கள் யார், யாருக்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் கிராம பொது மக்களுக்காக தாக்கல் செய்துள்ளேன். நான் கோவில் மரியாதைக்காரர்களுக்காக வழக்கு தாக்கல் செய்யவில்லை. அவர்கள் வேறு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். அந்த வழக்கு நிலுவையில் உள்ளதா என்றால் நிலுவையில் உள்ளது. எங்கள் ஊரில் உள்ள பட்டாதாரர்களுக்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, ஊர் பொதுமக்களுக்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 1 முதல் 3 மரியாதைக்காரர்களுக்கு எதிராகத்தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் பட்டாதாரர் என்று சொல்வதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ஐந்து மரியாதைகளில் முதல் மரியாதை என்ன என்றால் நாட்டாமை மரியாதை ஆகும். இரண்டாவது மரியாதை கிராம தண்டல்காரர் ஆவார். மூன்றாவது மரியாதை யாருக்கு என்றால் பெரிய சம்சாரிக்கு கிடைக்கும். நான்காவது மரியாதை யாருக்கு என்றால் அம்பலகாரருக்கு மற்றும் ஐந்தாவது மரியாதை கிராம கோனாருக்கு கிடைக்கும். ஆறாவதாக யாருக்கும் மரியாதை உள்ளதா என்றால் அரிசன் மக்களுக்கு வழங்கப்படும். கிராம கோவில்களில் முதல் ஐந்து மரியாதை கிராம கோவில் நிர்வாகம் செய்யும் என்றால் சரிதான். ஆறாவது மரியாதையில் கிராம கோவில் நிர்வாகத்தில் பங்கில்லை. திருவிழாக்கள் எத்தனை வருடமாக கொண்டாடி வருகிறோம் என்றால் பொதுவாக வருடந்தோறும், பணம் இல்லாத போது இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை கொண்டாடப்படும். கடைசியாக எப்போது சாமி கும்பிட்டார்கள் என்று ஞாபகம் உள்ளதா என்றால் ஞாபகம் இல்லை. கோவில் வருமானத்திற்க என்ன ஆதாரதம் உள்ளது என்றால் கிராம கண்மாய் குத்தகை, மீன்குத்தகை மற்றும் கடை வரி

வசூலிக்கப்பதன் மூலம் வருமானம் கிடைக்கும், இதை யார் வசூலிப்பது என்றால் 1 மற்றும் 2வது மரியாதைக்காரர்கள் மற்றும் தண்டல்காரர்கள் வசூலிப்பார்கள். நாட்டாமைக்காரர்தான் 1ம் பிரதிவாதி என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி தண்டல்காரர் என்றால் சரிதான். மாணிக்கம், சக்திவேல் என்பவர்கள் மூன்றாவது மரியாதைக்காரர்கள் என்றால் சரிதான். 7ம் பிரதிவாதி செல்வராஜ் 4ம் மரியாதைகாரர் என்றால் சரிதான். 8ம் பிரதிவாதி ராஜகோபால் எத்தனையாவது மரியாதை என்றால் 5ம் மரியாதை மற்றும் 9ம் பிரதிவாதி 6ம் மரியாதைகாரர் ஆவார். 5ம் பிரதிவாதி வீரணன், 6ம் பிரதிவாதி பொன்னாண்டி ஆகியோருக்கு எந்த மரியாதையும் கிடையாது என்றால் மூன்றாம் மரியாதை அவர்களுக்கும் உள்ளது. இந்த வழக்கில் சேர்த்துள்ள 5 மற்றும் 6ம் பிரதிவாதிகளுக்கும் மூன்றாம் மரியாதைக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 மற்றும் 2 ஆவணங்களின்படி 3வது மரியாதை 3 மற்றும் 4ம் பிரதிவாதிகளான மொக்கையன் மூப்பனார் வகையறாவினருக்கு என்றால் அப்படித்தான் உள்ளது. வேறு ஒரு வழக்கு கோவில் கணக்கு வழக்கு தொடர்பாக மதுரை சார்பு நீதிமன்றத்தில் நடந்து, வழக்கறிஞர் ஆணையர் நியமனம் செய்யப்பட்டுள்ளார் என்றால் சரிதான். கண்மாய் மீன் குத்தகை போன்றவை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யப்பட்டு வருகிறது என்றால் சரிதான். 1ம் வாதியின் சகோதரர் சின்னமணி கோவில் நிலங்களை குத்தகைக்கு எடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த குத்தகைப் பணத்தை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்கிறரா என்றால் தெரியாது. நாட்டாமை மற்றும் தண்டல்காரர்களிடம் ரசீது பெற்றுள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியாது. கோவில் சம்பந்தப்பட்ட மாடுகளை யார் விற்கிறார் என்ற விபரம் தெரியுமா என்றால் 1வது மரியாதைகாரர்கள் விற்பார்கள். 4 மற்றும் 6ம் வாதிகள்தான் கோவில் மாடுகளை வைத்து, பணத்தை வைத்திருக்கிறார்கள் என்றும், இந்த விபரம் எனக்குத் தெரியும் என்றாலும் சரியல்ல, எனக்குத் தெரியாது. 2007ல் கோவில் திருவிழா நடந்தவிபரம் தெரியுமா என்றால் அவர்களாக செய்து கொண்டார்கள், பொதுமக்கள் நடத்தவில்லை. யார் நடத்தியது என்றால் 1 முதல் 3 பிரதிவாதிகள் மட்டும் பணத்தை கையாடல் செய்வதற்காக நடத்தினார்கள். திருவிழா நடத்துவதற்கு ஊர் கூட்டம் போடப்பட்டதா என்றால் இல்லை. வங்கியில் வைப்பீடு செய்யப்பட்டுள்ள பணத்தை எடுத்தார்களா என்றால்

கூட்டுறவு வங்கியில் வைப்பீடு செய்யப்பட்டிருந்த பணத்தை எடுத்தார்கள். யார், யார் அந்த பணத்தை வைப்பீடு செய்தார்கள் என்றால் செல்வராஜ், பாண்டியன், நாயக்கன் ஆகியோர் வைப்பீடு செய்திருந்தார்கள். பணம் வைப்பீடு செய்த ஒன்பது பேர்களில் வாதிகள் யாரும் கிடையாது என்றால் சரிதான். திருவிழா நடந்த போது குதிரை எடுப்பு நடப்பதற்கு முன்னால் இந்த வழக்கை தாக்கல் செய்து, திருவிழாவை நிறுத்த விட்டேன் என்றால் இல்லை. கோவிலில் பணம் எடுப்பது சம்பந்தமாக 06.10.2010ல் புகார் கொடுத்ததாகச் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பணம் எடுத்தது தொடர்பான ஆவணத்தின்படி இரண்டு மாதத்திற்கு முன்பே பணம் எடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1 முதல் 3 பிரதிவாதிகள் முறைகேடாக பணம் பயன்படுத்தினார்கள் என்பதற்கு ஆதாரம் உள்ளதா என்றால் இல்லை. நான் சொல்வதுபோல் 1 முதல் 3 பிரதிவாதிகள் பணத்தை எந்தவிதமான முறைகேடும் செய்யவில்லை என்றால் சரியல்ல. 2010ல் சாமி கும்பிடுமபோது எந்தவிதமான முறைகேடும் நடக்கவில்லை என்றாலும், தேர்தல் முன் விரோதத்தின் காரணமாக 1 முதல் 3 பிரதிவாதிகள் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இதே வழக்கு சம்பந்தமாக மதுரை சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து, தெளிவான தீர்ப்பு பெறப்பட்டுள்ள நிலையில், இந்த வழக்கை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்து, நீதிமன்ற நேரத்தை வீணடித்ததற்காக இந்த வழக்கை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

<u>4ம் பிரதிவாதிதரப்பில் குறுக்கு விசாரணை</u>

சக்திவேலின் உடன்பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் மூன்று பேர் ஆவார்கள். மூன்று பேரையும் வழக்கில் சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. சக்திவேல் என்பவர் சின்னையாவின் சகோதரர் என்றால் சரிதான். சின்னையாவை வழக்கில் சேர்க்காமல் சக்திவேலை வழக்கில் சேர்த்ததற்கான காரணம் என்ன என்றால் மாணிக்கத்திற்காக சக்திவேல் பார்ப்பதால் அவரை வழக்கில் சேர்த்துள்ளேன். 2006 முதல் 2011 வரை சக்திவேலின் மகன் ஊராட்சி மன்ற தலைவராக இருந்தார் என்றால் சரிதான். அவரது முயற்சியின் பேரில்தான் 2007ம் ஆண்டு திருவிழா நடைபெற்றது என்றால் சரியல்ல. நான் அதற்கு முன்னால் இந்த வழக்கின் பிரதிவாதி செல்வராஜ் தலைவராக இருக்கும் போது, நான் துணைத்தலைவராக இருந்தேன்

என்றால் சரிதான். தேர்தல் முன் விரோத்தின் காரணமாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கானது 4ம் பிரதிவரிதயின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. 2010 திருவிழாவின் போது எந்தவிதமான முறைகேடும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. அந்த திருவிழா நடைபெற்றால் மீண்டும் சந்திரன் ஊராட்சி தலைவராக வந்து விடுவார் என்பதால் இந்த வழக்கை தாக்கல் செய்துளளேன் என்றால் சரியல்ல.

<u>11 மற்றும் 12 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இந்த வழக்கு எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் பணம் கையாடல் சம்பந்தமாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா ஐந்து கோவில்களிலும் ஆறு மரியாதைகாரர்களும் சேர்ந்து கூட்டாக திருவிழா நடத்த வேண்டும் என்பதில் எனக்கு ஆட்சேபணை உள்ளதா என்றால் ஐந்து பேர் சோந்து சாமி கும்பிடுவதில் எனக்கு ஆட்சேபணை இல்லை. ஐந்து பேருக்கு உரிய மரியாதை சம்பந்தப்பட்ட சங்கதிகள் கோவில் பெட்டகத்தில் உள்ள நோட்டில் எழுதப்பட்டுள்ளது என்றர்ல சரிதான். சமீபத்தில் சாமி கும்பிடுவது சம்பந்தமாக மதுரை கிழக்கு வட்டாட்சியர் அலுவலத்தில் சமாதானக் கூட்டம் நடைபெற்றது என்றால் 1, 2 மரியாதைக்காரர்களாக ஏற்பாடு செய்து கொண்டார்கள். சமாதானக் கூட்டத்தில்நான் கலந்து கொண்டேனா என்றர்ல இல்லை. மாண்புமிகு மதுரை உயர் நீதிமன்றக் கிளையில் சாமி கும்பிடுவது தொடர்பாக உத்தரவு ஏற்பட்டுள்ளது என்றாலும், அதன் அடிப்படையில்தான் வட்டாட்சியர் சமாதானக் கூட்டம் நடத்தினார் என்றாலும் தெரியாது. வாதிகள் 14 பேரில் நான் எந்த வகையைச் சேர்ந்தவர் என்றால் நாட்டாமை வகையறா ஆகும். இதில் பட்டாதாரர் வகையறா உள்ளார்களா என்றால் இருக்கிறார்கள். வாதிகளில் யார், யார் நாட்டாமை வகையறா என்றால் வாதிகள் 14 பேரும் நாட்டாமை வகையறா ஆவார்கள். இந்த 14 பேரும் பட்டாதார்களாக இருக்கிறோம். இந்த வழக்கில் மூன்று ஊரைச் சேர்ந்த கிராம மக்களுக்காகவும் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இதில் நாட்டாமை வகையறா தவிர மற்ற வகையறாவினர் இந்த வழக்கின் வாதிகள் இல்லை என்றால் சரிதான். கிராமத்தின் பிரதிநிதிகளாக இந்த வழக்கை தாக்கல் செய்ய எங்களுக்கு அருகதை கிடையாது என்றால் சரியல்ல. 7, 8 பிரதிவாதிகள் எந்த வகையைச் சேர்ந்தவர்கள் என்றால் 4ம்

மரியாதைக்காரர்கள் ஆவார்கள். வீரணன், பொன்னாண்டி ஆகியோர் 3ம் மரியாதைகாரர்கள் ஆவார்கள். அவர்கள் எந்த ஊரைச் சேர்ந்தவர்கள் என்றால் புதுப்பட்டியில்தான் குடியிருக்கிறார்கள். வீரணன், பொன்னாண்டி ஆகியோர் 3ம் மரியாதைக்காரர்கள் இல்லை என்றாலும், அவர்களை இடைச் செருகலாக வழக்கில் சேர்த்துள்ளேன் என்றர்ல சரியல்ல. உரிய மரபுப்படி அனைவருக்கும் உள்ள மரியாதைகாரர்கள் சேர்ந்துதான் திருவிழா நடத்த வேண்டும் என்றால் சரிதான். எங்கள் கரை பெயரிலும் எங்களுக்கு தனிப்பட்ட முறையில் மரியாதை உள்ளதா என்றால் தனிப்பட்ட முறையில் மரியாதை கிடையாது. தனிப்பட்ட முறையில் நான் எந்த பொறுப்பிலும் இருக்கிறேனா என்றால் இல்லை. நான் கிராமத்தில் ஒற்றுமையாக சாமி கும்பிடுவதை குலைக்கும் நோக்கில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கின் உண்மையான விபரங்களை மறைத்துள்ளேன் என்றாலும், நீதிமன்ற விவகாரங்களை இந்த வழக்கில் தெரியப்படுத்தவில்லை என்றால் சரியல்ல. உயர்நீதிமன்ற உத்தரவையும் நான் மதிக்கவில்லை என்றால் சரியல்ல. வட்டாட்சியர் எடுத்த சமாதான உடன்படிக்கையின்படியும் நாங்கள் நடந்து கொள்ளவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் இந்த வழக்கை முறையாக தாக்கல் செய்வதற்கு எனக்கு எந்தவிதமான மரியாதையும் கிடையாது என்றாலும், எனவே இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல.